யாகிய நிகழ்ச்சிகள் கூட இருக்கின்றன. உரிமைப் பிரச்னைகளை எப்பொழுது எடுத்துக் கொள்ளலாம் என்பதற்கு சபாநாயகர் தான் காலம் குறிப்பிட வேண்டும். அந்தக் காலத்திலேதான் எடுத்துக்கொள்ள முடியும். ''அது ஓர் உரிமைப் பிரச்னை, அதை ஏற்றுக் கொள்ளலாமா?'' என்றெல்லாம் கேட்பதற்கு இடம் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். திரு. பால சுப்பிரமணியன் அவர்கள் கொடுத்திருக்கின்ற உரிமைப் பிரச்னையைப் பொறுததவரை பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களைக் கலந்து அதற்கு நான்அளிக்கிறேன். அதையும் இன்றே எடுத்துக் கொள்ளலாம் என்று இருந்தேன். அமைச்சர் வராத காரணத்தாலே இன்றையதினம் எடுத்துக் கொள்ளவில்லை.

டாக்டர் எஸ். வி. ஹாண்டே : ஒரு விளக்கம். திட்டவட்டமாக உரிமைப் பிரச்னையை எப்பொழுது கிளப்பலாம் என்று நீங்கள் இங்கே ஒரு அறிவிப்புத் தந்தால் அது நமக்கு, அடுத்தபடியாக புது உரிமைப் பிரச்னை கொண்டுவர வேண்டுமென்று விரும்பினுல் சௌகரியமாக இருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் சொல்வது புரிகிறது. சபாநாயகர் இப்பொழுது செய்யக் கூடிய தெல்லாம் நம்முடைய கையிலே இருக்கிற சட்டமன்ற விதிமுறைகள் என்ன கூறுகின்றனவோ, நம்முடைய சட்டமன்ற நிகழ்ச்சிகள் எப்படி நடந்திருக்கின்றனவோ, அதை ஒட்டித்தான் ஆகவே, இப்பொழுது இருக்கின்ற சட்டமன்ற விதிமுறைகளும் சட்டமன்ற நிகழ்ச்சிகளினுடைய முன் நிகழ்ச்சிகளும் இப்பொழுது நான் கூறிய முறையைத்தான் கூறுகின்றன. ஆகவே, அதற்கு மாருக வேறு ஏதாவது கொடுக்க வேண்டுமென்று சொன்னுல் மாண்புமிகு உறுப்பினர் கள் ஒரு தீர்மானம் கொடுத்து நிறைவேற்றிக் கொள்ளலாம். அதை ரூல்ஸ் கமிட்டி பரிசீலிக்கும் என்று நான் கூறியிருக்கிறேன். அதை மீண்டும் மீண்டும் இந்த மன்றத்திலே எழுப்ப வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒரு மசோதா, மாண்புமிகு இராமமூர்த்தி அவர்கள்.

4. தனி உறுப்பினர் அலுவல்

(i) மசோதா

தமிழ்நாடு 1968-ம் ஆண்டு திருமணங்கள் பதிவு செய்தல் மசோதா

THIRU K. RAMAMURTHY : Sir, I move for leave to introduce the Madras State Marriages Registration Bill, 1968.

THIRU N. S. V. CHITHAN : I second the motion.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

THIRU K. RAMAMURTHY : I have pleasure to introduce the Bill.

மாண்புமிகு பேரவைத் துணைப் தலைவர் : மசோதா அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

இப்பொழுது திரு. பழனிவேல் ராஜன் அவர்கள் ஒரு தன்னிலை விளக்கம் கொடுக்க விரும்புகிருர்.

5. தன்னிலை விளக்கம்.

திரு பழனிவேல் ராஜன் ஆற்றிய உரையில் திருத்தம்.

THIRU PALANIVEL RAJAN : Sir, while speaking on the no-confidence motion yesterday, I said that according to Mr. K. T. Kosalram the Congress Party had spent seventy-five lakhs of

rupees in the last general election. It has now been pointed out that, while Mr. K. T. Kosalram was present at the meeting, Mr. S. N. Somayajulu was the person who made the statement that seventy-five lakhs had been spent. I express regret for the mistake and request that the proceedings be suitably amended.

4. தனி உறுப்பினர் அலுவல்—தொடர்ச்சி.
(ii) தனித் தீர்மானங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, தனி நபர் தீர்மானங்கள். தீர்மானம் 1, திரு. மெய்யப்பன் அவர்கள் இடத்தில் இல்லை; ஆகவே, அது முன் மொழியப்படவில்லை. அடுத்து, இரண்டாவது தீர்மானம், திரு. க. ர. நல்லசிவன் அவர்கள்.

(1) அங்கத்தினர்களும், அமைச்சர்களும் சொத்து வருமான—செலவு விவரங்களைப் பேரவைமுன் அளித்தல்.

திரு. க. ர. நல்லசிவன் : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"சட்டப்பேரவை அங்கத்தினர்களும், அமைச்சர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து தங்களது சொத்து, வருமானம்—செலவுபற்றிய விவரங்களை வருடாவருடம் சட்டப்பேரவை முன் சமர்ப்பிக்க வேண்டுமென்று இப் பேரவை கருதுகிறது."

பெருமதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் இது போன்ற ஒரு தீர்மானத்தைப் பிரேரேபிப்பதிலே நான் உண்மையிலே பெருமகிழ்ச்சி அடைகிறேன். ஏனெனில் இதுவரையிலே இதுபோன்ற கருத்துப் பேசப்பட்டு வந்ததே தவிர நடைமுறையில் கொண்டுவருவதற்கான சந்தர்ப்பம் இருந்ததே கிடையாது. இதை யெல்லாம் விட எனது மதிப்பிற்குரிய சட்ட அமைச்சர் அவர்கள் 1964-வது ஆண்டிலே நானுவது தீர்மானமாகக் கொடுத்திருக்கிறேன்—மசோதா உருவத்திலே இந்தச் சட்டசபையிலே கொடுத்தார்கள். அதன் மீது விவாதம் நடந்தது. அதை ஆதரித்து ஓட்டு போட்டவர்களிலே, எங்களிலே பெருவாரியான நண்பர்கள், இங்கே இருக்கிறோம். அதை எதிர்த்த பல பேர் இங்கே கிடையாது. அந்த வகையிலே இது நிறைவேறும் என்பதற்கு எனக்குப் பூரணமான நம்பிக்கை இருக்கிறது. அது மாத்திரம் அல்ல, என்னுடைய 14 வருஷ சட்டசபை வாழ்விலே நிறைவேறக்கூடிய தீர்மானம் கொண்டு வரக்கூடிய சந்தர்ப்பம் இப்பொபொழுது தான் எனக்குக் கிடைத்திருக்கிறது. இதை நிறைவேற்றுவதன் மூலம் நாம் மகிழ்ச்சிக்குரியவர்களாவோம் என்பதிலே எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. முதல் முதலாக, அமைச்சர் அவர்கள் முன்பு கொடுத்த மசோதாவிலே கொடுத்த காரண, காரிய விளக்கத்தைப் படித்துவிட்டு இதைப்பற்றி நான் பேச விரும்புகிறேன்.

Whereas the citizens of India are engaged in the great experiment of "Democratic Socialism" and whereas the practice of democracy should be nurtured in our country based on high principles, political and moral, and whereas the people should be convinced that their representatives holding offices either as Members or as Ministers hold such offices only for the public benefit and not to benefit themselves directly or indirectly and should be above suspicion, an enactment as above is necessary.

என்ற காரண, காரிய விளக்கத்தோடு இந்த மசோதாவைக் கொடுத்திருக்கிறார்கள். உண்மையிலே அன்றைக்கு நாட்டிலே இந்தத் தீர்மானத்தை மசோதாவாகக் கொண்டுவந்து சட்டமாக்குவதற்கான அவசியம் இருந்தது